(2) தகவல் கோரல்.

(2) பேரவை அலுவல் குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவை நீங்கள் அடிக்கடி கூட்டி, எங்களையெல்லாம் அழைத்துப் பேசுவது, இங்கே நடைபெற வேண்டிய அலுவல் களுக்கு, அவரவர்களுக்கு உள்ள நிகழ்ச்சிகளையொட்டித்தான், நீங்கள் இந்த நிகழ்ச்சி நிரலை வகுக்கின்றீர்கள். ஆனால் எதிர் பாராதவிதமாக தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் எப்படியோ இந்த நிகழ்ச்சி நிரல் முறைப்படி நடக்கவில்லை. நான் பல முறை சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அவ்வாறே, இந்த முறையும் ஆகிவிட்டது. இந்தக் கண்டனத்தீர்மானத்தின்மீது நடைபெறு கின்ற விவாதம் நாளைக்காவது நிச்சயமாக முடிவுற்று விடும் என்கின்ற உறுதியிருந்தால் பரவாயில்லை: தங்கள் மூலமாக அறிந்துசொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால், வெவ்வேறு தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளுக்கு நாங்கள் செல்லவேண்டி யிருக்கிறது. அவைகளையொட்டித்தான் ஏற்கனவே நாம் நிகழ்ச்சி நிரலை வகுத்தோம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: குறுக்கீடுகள் இல்லையென் றால் நிச்சயமாக நாளையே முடிவுறும் என்று நான் நினைக் கிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, நான் என்ன சொல்ல விரும்பினேனோ, அதைத்தான் நண்பர் ஆறுமுகம் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். சாதாரணமாக, எப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகின்ற வரையில் நான் எவ்வளவு அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தேனோ, அதுபோல் நான் பேசிமுடிக்கின்ற வரையில் குறுக்கிடாமல் இருந்து அதற்குப் பிறகு பேராசிரியர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், இவ்வளவு நாள் நீட்டிக்கொண்டு போயிருக்காது. நாளைய தினம் அந்த மாதிரி இல்லாமலிருந்தால் நிச்சயமாக முடிந்துவிடும். இல்லையென்றால், ஒரு மணி நேரம் நீட்டியாவது நாளைக்கு முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.

திரு. மு. அம்பிகாபதி; பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு என்பது வேறு, விளக்கங்கள் என்பது வேறு. மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து சில விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம், நாங்கள் குறுக்கிட விரும்ப வில்லை. எல்லாவற்றையும் குறுக்கீடு என்ற வகையில் நாம் கருதிவிடக்கூடாது.

[1979 நவம்பர் 5

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிட்டுத்தான் விளக்கத்தைப் பெற முடியும்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, நாளைய தினம் ராஜ பவனத்திற்கு நாம் பிரதம நீதிபதியாக பதவி ஏற்கின்ற அந்த வைபவத்திற்குச் செல்ல வேண்டுமென்று இங்கே அறிவித்திருக்கிறீர்கள். நாமெல்லாம் செல்வதற்கு ஏதாவது ஏற்பாடாகியிருக்கிறதா என்பதை சபையிலே அறிவித்து விட்டால் நாம் எங்கேயிருந்து செல்லவேண்டும், எப்படி எங்களை அழைத்துச் செல்லப் போகிறீர்கள் என்ற விவரத்தை சபைக்கு அறிவித்து விட்டால் எங்களுக்கு சவுகரியமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அனுமதியோடு போக்குவரத்துத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன், தங்கும் விடுதியிலேயிருந்து உறுப்பினர்கள் கவர்னர் இல்லத்திற்கு செல்வதற்கு பஸ்களை ஏற்பாடு செய்தால் நலம் என்று கருதுகிறேன். பிறகு, அங்கேயிருந்து இங்கே சட்டமன்றத்திற்கு வருவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். கவர்னர் இல்லத்திற்குச் சென்று, பதவி பிரமாண நிகழ்ச்சியை முடித்துவிட்டு, மறுபடியும் இங்கே வரும் வரை பஸ்களை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(7) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதிலே ஊராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கான காரணங்களை முதலமைச்சர் அவர்கள் சரியாக விளக்கவேண்டும். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இப்பொழுது ஊராட்சிமன்றங்கள் கலைக்கப்பட்ட பிறகு அங்கே தனி அலுவலர்கள் நிர்வாகம் செய்கின்றார்கள். இதுவரை அலுவலர்கள் இருந்த இடத்திலே, கூட்டுறவு வங்கிகளிலே, கோயில்களிலே எல்லாம் இப்பொழுது உங்கள் கட்சிக்காரர்களையே அங்கே ஆலோசனை குழுக்களுக்கு நியமனம் செய்திருக்கிறீர்கள். அதுபோல் இந்த ஊராட்சி மன்றங்களிலும் நீங்கள் உங்கள் கட்சிக்காரர்களை இந்த ஆலோசனை குழுக்களில் நியமனம் செய்ய ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, எங்கள் கட்சிக்காரர்கள், மாற்றுக் கட்சிக்காரர்கள் என்று நாங்கள் பார்த்து, யாரையும் நியமிப்பதில்லை.